**செய்தி வெளியீடு எண்: 046** **நாள்: 16.01.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.1.2018) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

**‘‘முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்’’**

மன்னர்கள் காத்த தமிழ் !
அறிஞர்கள் ஆய்ந்த தமிழ் !
சங்கம் வளர்த்த தமிழ் !
சமயம் செழித்த தமிழ் !

இயல் தமிழ் !
இசைத் தமிழ் !
நாடகத் தமிழ் !
என முத்தமிழாக இருந்ததை
‘அறிவியல் தமிழ்’ என்று நான்காம் தமிழாக்கி - இன்று ‘அம்மா தமிழ்’’ என்று ஐந்தாம் தமிழாக, தமிழர்களின் நாவில் நர்த்தனம் புரியும் நற்றமிழ் நாயகி, எங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் குடியிருக்கும் எங்கள் குல தெய்வம்!
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

வான்புகழ் வள்ளுவர் பெயரில் நடைபெறும்
இந்த தமிழ் மணம் கமழும் விழாவில் கலந்து கொண்டு
(அறிஞர் பெருமக்களையும்) உங்களையும் சந்திப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு
மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்
திரு. **க.பாண்டியராஜன்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும்

நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்
திரு. **டி.ஜெயக்குமார்** அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
திரு. **கடம்பூர் ராஜூ** அவர்களே!
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு. **பா.பென்ஜமின்** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர்
திரு. **இரா. வெங்கடேசன்** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்
**திரு. கோ.விசயராகவன்** அவர்களே !

இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள
மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு.பி.தங்கமணி அவர்களே,

மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்
டாக்டர் வி.சரோஜா அவர்களே,

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
திரு. எம்.சி.சம்பத் அவர்களே,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
டாக்டர் நீலோபர் கபீல் அவர்களே,

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு.பி.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே,

புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி
திரு.தளவாய் சுந்தரம் அவர்களே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!
அரசு அலுவலர்களே! தமிழறிஞர் பெருமக்களே !
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
பரத நாட்டியக் கலைஞர்களே!
தமிழ்நாடு அரசின் சிறப்பிற்குரிய விருதுகளை
பெற்ற தமிழ் அறிஞர்களே!
பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் உயிருக்கு மேலான தமிழை
தேன்தமிழே ! செந்தமிழே! நற்றமிழே! முத்தமிழே! காப்பியத்தமிழே! கன்னித் தமிழே! பூந்தமிழே!
என்று அழைப்பதைவிட
**'தமிழே! தாய்த்தமிழே!'**
என்று அழைப்பதில்தான்
உணர்வு இருக்கிறது, அழகு இருக்கிறது.

மம்மி, மதர், அன்னை, தாய் என்று அழைப்பதைவிட **'அம்மா'** என்று அழைப்பதில்தான் உயிர் இருக்கிறது. காரணம்,
**'அ'** என்கின்ற உயிரெழுத்தும்
**'ம்'** என்கின்ற மெய்யெழுத்தும்
**'மா'** என்கின்ற உயிர்மெய் எழுத்தும் சேர்ந்திருக்கும் ஒற்றை தமிழ்ச் சொல் தான்
**'அம்மா'** என்கின்ற
வேத சொல்.

அதனால்தான் **'அம்மா'** என்கின்ற சொல்லுக்கு
அத்தனை சக்தி இருக்கிறது.
இனி எத்தனை காலமானாலும் **'அம்மா'** என்கின்ற சொல்லால் மட்டுமே தமிழையும், தமிழரையும் காக்கவும், வளர்க்கவும் முடியும் என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொண்டு என் உரையை தொடங்குகிறேன்.

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையில் தை மாதத்தின் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாளாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம். தெய்வப் புலவர் திருவள்ளுவரை நினைவுகூரும் நாளாகவும், திருக்குறள் என்னும் நீதி நெறி நூலை மானுடத்திற்கு வழங்கி தமிழரின் பெருமையை உலகமெல்லாம் பரவச்செய்த திருவள்ளுவருக்கு நன்றி நல்கிடும் விழாவாகவும்
இத்திருநாளை நாம் கொண்டாடுகின்றோம்.

‘தமிழ் ’ மொழி தமிழருக்கு அடையாளம் என்றால்,
திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது.
தமிழை நேசித்தால் பிறந்த நாட்டையும்,
வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற பெற்றோரையும் நேசிப்பதற்கும்,
வணங்குவதற்கும் சமம் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.
‘தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை’ என்பதை நமக்கு நினைவு படுத்தவே இப்படிப்பட்ட நாட்கள் அனுசரிக்கப்படுகின்றன.

தமிழ் என்பது தமிழர்களின் அறிவு, பண்பாடு, வீரம், நாகரிகம், பழக்கவழக்கம் ஆகிய ஐந்தும் கலந்த
ஒரு சுவைமிகு கூட்டுக் கலவை. அதை நாம் பஞ்சாமிருதமாக சுவைக்கலாம் என்று தமிழர் பண்டிகைகள் உலகிற்கு பறைசாற்றுகின்றன.

மனிதர்கள் நம் செவியோடு பேசுகிறார்கள்
நண்பர்கள் நம் உணர்வுகளோடு பேசுகிறார்கள்
இறைவன் நம் ஆன்மாவோடு பேசுகிறார்
புத்தகங்கள் மட்டும்தான் நம் மனதோடு
பேசுகின்றன என்பார்கள்.

எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி அவர்களுக்குள்ளே தாக்கத்தையும்,
மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில்
தலை சிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிக்கப்படுகின்றன, போற்றப்படுகின்றன.

அவற்றையும் மிஞ்சும் அளவிற்கு
ஒரு நூல் போற்றி வணங்கப்படுகிறது
என்றால் அது திருக்குறள் மட்டும்தான்.
உலகில் உள்ள அத்தனை மனிதர்களாலும் வணங்கப்படுகிறது.

நம் மண்ணுக்கு  சொந்தக்காரர்,
நம் தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து
தமிழை சுவாசித்த மகாகவி பாரதியார் அவர்கள் ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்’  என்று  கூறினார்

ஆனால், தமிழ் மொழி அறியாத வெளிநாட்டில் பிறந்து தமிழை ஆராய்ச்சி செய்த ராபர்ட் கால்டுவெல்,
**‘தமிழ் மொழி தனித்தியங்கக் கூடிய
வல்லமை உடையது’** என்று கூறுவது

தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு

திரு ராபர்ட் கால்டுவெல், திரு வீரமாமுனிவர்,
திரு ஜி.யு போப், திரு எல்லீசு போன்ற பல வெளிநாட்டு அறிஞர்கள்தான் பழமைமிக்க தமிழை உலகளாவிய அளவிற்கு கொண்டு சென்றார்கள்.

இன்றைக்கு சுமார் 40 நாடுகளில் தமிழர்கள்
பரவி வாழ்கிறார்கள், அந்தந்த நாடுகளில்
தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன.
வெளிநாட்டினரும் தமிழ் அறியா பிற மாநிலத்தவர் மற்றும் பிற நாட்டினர் தமிழ் பேசுகிறார்கள்,
தமிழ் எழுதுகிறார்கள்.
ஆனால், தமிழ் நாட்டிலேயே பிறந்து , தமிழ் நாட்டிலேயே வாழும் சிலர் பிற மொழி மோகத்தில் தமிழை தவிர்ப்பது, வேதனை அளிக்கிறது.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு
10 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில்
தமிழ்மொழி தேசியமொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது
பொருள்தேடி கடல் கடந்து சென்று
குடியேறிய நாடுகளிலும் தமிழர் என்ற
தன் அடையாளத்தை, தன் பண்பாட்டை,
மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வே அதற்குக் காரணம்.

இந்தியாவிலேயே முதன்முதலில் அச்சுக்கு வந்த மொழி தமிழ் என்பதைப்போலவே,
முதன்முதலில் கணினிக்குள் புகுந்த
மொழியும் தமிழ்தான்.
இன்று இணையதளம் தமிழ் இலக்கியங்களை
உலகம் முழுவம் கொண்டு சேர்க்கிறது.

‘**தமிழ் விக்கிபீடியா**’ வலை தளத்தை
ஒரே நாளில் அதாவது 24 மணி நேரத்தில்
சுமார் 3 லட்சம் பேர் படிக்கின்றனர்.
இணையம் வழியாக தமிழ் பரவ நம் இளைஞர்கள் தான் காரணம். இதற்காக அவர்களுக்கு முதற்கண் என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவர், கம்பர், அவ்வையார், இளங்கோவடிகள், ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர், பாரதியார், பாரதிதாசன் போன்ற பல தமிழ் புலவர்களை நாம் இன்னமும் நம்முடைய இதயத்தில் வைத்து போற்றி வருகிறோம்.

தமிழ் தான் அவர்களுக்கு சாகாவரம் கொடுத்தது. அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'தே மதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்பதையே,
தாரக மந்திரமாக ஏற்று, உலகில் அதிக மக்கள் பேசும் சீனம், அரபு, கொரிய மொழிகளில் திருக்குறள், ஆத்தி சூடி, பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார்கள்,

இன்றைக்கு தமிழ்மொழி நீதி நூல் படைப்புகளாக உலகம் முழுவதும் பரவி தமிழுக்கு மகுடம் சூட்டியிருப்பதற்கு முழுமுதற்காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
பிற மொழியில் உள்ள அரிய படைப்புகளை தமிழிலும்,

தமிழில் உள்ள அரிய நூல்களை பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கச் செய்வதன் மூலம் தமிழை,
மேலும் வளர்க்க முடியும் என்று எண்ணித்தான்,
'மொழி பெயர்ப்பாளர் விருது' உருவாக்கி,
வருடாவருடம் சித்திரை புத்தாண்டு விழாவில்
10 சிறந்த மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு
விருது வழங்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் அதனை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

கீதை, பைபிள், குரான் போன்ற நூல்கள் உலகத்தின்
பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது
நாம் அனைவரும் அறிந்ததே.
ஆனால், எந்த மதத்தையும் சாராத திருக்குறள் தான்
சுமார் 100 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே நூல். திருக்குறளை சுமார் 140 பேர் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.
ஆங்கிலத்தில் மட்டும் சுமார் 50 பேர்
மொழி பெயர்த்திருக்கிறார்கள்.
காரணம், உலக சமயத் தலைவர்கள்,
உலக சான்றோர்கள், அறிஞர்கள் கூறுகின்ற
அத்தனை கருத்துக்களும், நீதிகளும் -
ஒரே நூலில் கருத்துக் குவியலாக, நீதி களஞ்சியமாக இருக்கின்றன என்றால் அது திருக்குறளில் மட்டும்தான்.

வழி காட்டும் ஒளி விளக்காய்
ஒளியூட்டும் பெருவிளக்காய்,
பிணி நீக்கும் அரு மருந்தாய்,
உணர்வூட்டும் உயர்மருந்தாய் – உலகத்தில்
இணையற்று திகழ்வதுதான் திருக்குறள்.

தமிழ்தாய்க்கு அணிகலன்களாக சிலப்பதிகாரமும், சிந்தாமணியும், குண்டலகேசியும், வளையாபதியும் இன்னும் பல காப்பியங்களும் நீதி நூல்களும்
அழகு சேர்த்தாலும், தன் கையில் திருக்குறளை செங்கோலாக வைத்துக் கொண்டுதான் தமிழ்த்தாய் உலகையே ஆட்சி செய்கிறாள்.

திருக்குறளைப் போல் அறம் சொன்ன நீதி நூல்,
உலகில் ஒரு சிலவே, அதனால்தான்
இங்கிலாந்து நாட்டின் விக்டோரியா மகாராணி, காலையில் கண் விழித்ததும்
திருக்குறளை முதலில் படிப்பார்.

திருக்குறளை படித்து உணர்வதற்கென்றே
இன்னொரு பிறவி எடுத்து, தமிழனாக பிறக்கவேண்டும் என்று மகாத்மா காந்திஜி அவர்கள் கூறினார்கள்.

திருக்குறள் தொடர்பான தங்கக் காசு வெளியிட்டார்
எல்லீசு என்ற ஆங்கிலேயே அதிகாரி.
ரஷ்யாவிலுள்ள கிரெம்ளின் மாளிகைச் சுரங்க அறையில் திருக்குறள் பத்திரமாக வைத்து பாதுகாக்கப்படுகிறது.

கன்னியாகுமரி புதுடெல்லி விரைவு ரயிலுக்கு ‘திருக்குறள் எக்ஸ்பிரஸ்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.
திருநெல்வேலியிலுள்ள ஆசியாவின் முதல் ஈரடுக்கு மேம்பாலத்திற்கு ‘திருவள்ளுவர் மேம்பாலம்’ என்று பெயர் சூட்டியிருக்கின்றோம்.

திருவள்ளுவர் பெயரில் ஆயிரக்கணக்கான
தமிழ்ச் சங்கங்கள் உலகமெங்கும் இயங்கி வருகிறது. திருவள்ளுவர்
பெயரைக்கொண்டு தமிழையும் , தமிழைக்கொண்டு திருவள்ளுவரையும் சிறப்பிக்க
தமிழ் ஆண்டுகளை திருவள்ளுவர் ஆண்டு
என்று அழைக்கப்படுகிறது.

திருக்குறள் ஒன்றாம் வகுப்பு பாடத்திட்டத்திலும் இருக்கிறது. ஆராய்ச்சி பாடத்திலும் இருக்கிறது.

வயது வரம்பு இல்லாமல், எல்லோருக்கும், பொதுவான ஒரு வாழ்வியல் நூல் திருக்குறள் மட்டும் தான்.
இந்த பெருமை வேறு எந்த நூலுக்கும் , எந்த நாட்டிலும் கிடையாது. திருக்குறளுக்கு 226 பேர் உரை எழுதியுள்ளார்கள். ஒரு நூலை புகழ்ந்து பேச திருவள்ளுவமாலை என்னும் இன்னொரு நூல் எழுதப்பெற்றது திருக்குறளுக்கு மட்டும்தான்.

இன்றுவரை திருக்குறளைப் பற்றி ஆய்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்றைக்கும் திருக்குறளை ஆய்வு செய்ய புதிய புதிய கருத்துகளும், சிந்தனைகளும் உருவாகின்றன.

அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாக
திருக்குறள் பகுக்கப்பட்டுள்ளது.

நூலை வடிப்பதைவிட
நூலை படிப்பதை விட
ஒரு நூலாக வாழ்வதே சிறந்தது.
திருக்குறளில் கூறப்பட்டுள்ள குறள்களில் உள்ள
கருத்துக்கள்படி, நாம் வாழ வேண்டும்.
அப்போதுதான் இந்தப் பிறவியும்,
வாழ்வும் நிறைவு பெறும்.

ஒரு தனிமனிதன் எப்படி வாழவேண்டும்?
ஒரு இல்லறம் எப்படி நடக்கவேண்டும்?
ஒரு சமுதாயம் எப்படி இயங்க வேண்டும்?
ஒரு மன்னன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும்?
ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? என்று அத்தனை வழிமுறைகளும்
திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வாழும் கலை முதல் ஆளும் கலை வரை கற்றுத் தரும் ஒரே நூல் திருக்குறள்.

ஒரு சமையல் நூலை வைத்துக்கொண்டு
சுவையாக சமைத்து விடுவதைப்போல,
ஒரு சுற்றுலா வரைபடத்தை வைத்துக்கொண்டு
சிறப்பாக பயணம் மேற்கொள்வதைப்போல
திருக்குறள் என்ற ஒரே ஒரு நூலை கையில் வைத்துக்கொண்டு இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து விடலாம்.

எனவே, “வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில்”
நாம் பிறந்ததற்காக பெருமைப்பட வேண்டும்.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பார்கள். அதைப்போல ‘திருக்குறளை’ படித்தாலும் வாழ வழி கிடைக்கும். எனவே தான்
‘தை’ மாதத் தொடக்கத்திலேயே, பொங்கல் பண்டிகைக்கு அடுத்த நாளே வரும் பண்டிகையை
நாம் திருவள்ளுவர் திருநாள் என்று கொண்டாடுகின்றோம்.
திருவள்ளுவன் உழவுத் தொழில்தான் உலகின் அச்சாணி என்று சொன்னதோடு,
‘சுழன்றும் ஏர் பின்னது உலகம்’ என்று
‘உழவனின் ஏரை மையப்புள்ளியாகக்கொண்டு தான் இந்த உலகம் சுற்றுகிறது’ என்றார்.
அதனால்தான் மூன்றாம் நாளை
உழவர் திருநாள் என்று நாம் கொண்டாடுகின்றோம்.
வாழ வகை சொன்ன வள்ளுவரையும்
வாழ உணவு கொடுக்கும் உழவரையும்
ஒரே நேரத்தில் சிறப்பிக்கவே
இந்த விழாவை நாம் பொங்கலின்
மூன்றாம் நாளான உழவர் திருநாளில் வைத்திருக்கிறோம்.
காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
வயிற்றுப் பசியைப்போக்கும் உழவர்களையும்
அறிவு பசியை போக்கும் புலவர்களையும்
மிகவும் நேசித்தார்கள். அவர்களின் நலனில்
அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்கள்.

நம் தாய்மொழி தமிழ் சுமார் 5000 ஆண்டுகால வரலாறு உடையது. தொல்காப்பியர் காலத்திலிருந்து, இன்று வரை தமிழின் தனித்தன்மையை, வழிவழியாக காத்து வருபவர்கள், நமது தமிழ் புலவர்களும், சான்றோர் பெருமக்களும் ஆவார்கள்.
ராஜ சபைக்கு வந்து, மன்னனின் புகழைப்பாடி
பரிசு பெறுகிற புலவன் கூட, கையேந்திப் பரிசு பெற்றதில்லை. பரிசுத் தட்டுக்கும் மேல்தான்
புலவனின் கை இருக்குமே தவிர, கீழே இருந்ததில்லை அப்படி தன்மானமும், ஞானமும் மிக்கவர்களாக புலவர்கள் இருந்தார்கள், வாழ்ந்தார்கள்.

எந்த நாட்டிலே புலவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ அந்த நாட்டில்தான் மொழி வளரும். ஆகவேதான், புலவர்களை ஆதரிக்கவேண்டும்,
தமிழ் மொழியை வளர்க்க வேண்டும்,
அவர்களுடைய படைப்புகளையெல்லாம்
ஆதரித்து காப்பாற்ற வேண்டும்
என பேரறிஞர் அண்ணா அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் **‘விழிபோல எண்ணி நம் மொழி காக்க வேண்டும்’**

என்ற எண்ணத்தில் தமிழறிஞர்களுக்கு
புதிய புதிய விருதுகளை அளித்து சிறப்பித்தார்கள்.

- பேரறிஞர் அண்ணா அவர்கள் **இரண்டாவது** உலகத்தமிழ் மாநாட்டையும்,
- மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **ஐந்தாவது** உலகத் தமிழ் மாநாட்டையும்,
- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **எட்டாவது** உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு புத்துணர்ச்சி ஊட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைத்தார்கள். மதுரையில் உலகத் தமிழ் சங்கம் நிறுவ வேண்டும் என்று அறிவித்தார்கள் அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 38 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வளாகமாக செயல்படுத்தினார்கள்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு
ஓய்வூதியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. ஓய்வூதியம் பெறும் அறிஞர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, கவிதை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இலக்கியத்தில் ஆர்வம் மிக்க 200 கல்லூரி இளைஞர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து ‘இளந்தமிழர் இலக்கியப் பட்டறை’ யின் மூலம் அவர்களுக்கு மொழி புத்துணர்வு அளிக்கப்படுகிறது.

தமிழின் பாதுகாப்பிலும், வளர்ச்சியிலும்
பெரும் பாங்காற்றும் தமிழ் அறிஞர்களுக்கு
நமது இருபெரும் தலைவர்களால் அறிவிக்கப்பட்டு இதுவரை 55 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தமிழுக்கும் தமிழறிஞர்களுக்கும் பல்வேறு திட்டங்கள் மூலம் நற்பணி ஆற்றி வந்தார்கள். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டிலிருந்து சிறிதும் பிறழாமல், நாங்கள் தமிழ் தொண்டாற்றி வருகிறோம்.

அதன் வெளிப்பாடாகத்தான் இந்த இனிய திருவள்ளுவர் திருநாளில் தமிழ் தொண்டாற்றி வரும்
ஏழு தமிழறிஞர்களுக்கும்,

சமுதாயத் தொண்டாற்றி வரும்
இரண்டு பொதுநலவாதிகளுக்கும்
இந்த மாபெரும் சபையில் பலருடைய பாராட்டுகளோடும், வாழ்த்துகளோடும்,
நான் விருதுகள் வழங்கி சிறப்பிக்க உள்ளேன்.

திருவள்ளுவர் விருது பெறும்
முனைவர் **கோ. பெரியண்ணன்** அவர்களுக்கும்,

தந்தைபெரியார் விருது பெறும்
**திருமதி. பா. வளர்மதி** அவர்களுக்கும்,

அண்ணல் அம்பேத்கர் விருது பெறும்
**டாக்டர் சகோதரர். ஜார்ஜ். கே.ஜே,** அவர்களுக்கும்,

பேரறிஞர் அண்ணா விருது பெறும்
**திரு. அ. சுப்ரமணியன்** அவர்களுக்கும்,

பெருந்தலைவர் காமராசர் விருது பெறும்
**திரு. தா. ரா. தினகரன்** அவர்களுக்கும்,

மகாகவி பாரதியார் விருது பெறும்
**முனைவர் சு. பாலசுப்ரமணியன் (எ) பாரதிபாலன்** அவர்களுக்கும்,

பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும்
**திரு. கே. ஜீவபாரதி** அவர்களுக்கும்,

தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெறும்
**எழுத்தாளர் திரு. வை.பாலகுமாரன்** அவர்களுக்கும்,

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது பெறும்
**முனைவர் ப.மருதநாயகம்** அவர்களுக்கும்

தமிழ்நாடு அரசின் சார்பில் எனது மனமார்ந்த பாராட்டுகளைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்க காலத்திலும் சரி,
சங்கம் மருவிய காலத்திலும் சரி,
ஒரு படைப்பாளியை,

சங்கம் சாதாரணமாக அங்கீகரித்ததில்லை.
அவரது படைப்பைப் பற்றி,
மதுரை தமிழ்ச் சங்கத்தில் உள்ள
பெரும் புலவர்களால் ஆய்வு செய்யப்பட்ட பிறகே,
அவர் சிறந்த புலவர் என
ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது.
அவர்களுடைய இலக்கியமும் அரங்கேற்றப்படும்.
தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,
அவர் இயற்றிய உலகப் பொதுமறை திருக்குறளும் கூட
தமிழ்ச் சங்கத்தில் பல சோதனைகளுக்கு
உட்படுத்தப்பட்ட பிறகே, அரங்கேற்றம் செய்யப்பட்டதாக நான் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்ச் சங்கத்தில், எப்படியும் திருக்குறளை
அரங்கேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில்,
தமிழ் மூதாட்டி ஔவையார் மற்றும்
பெரும்புலவர் இடைக்காட்டு சித்தர் ஆகியோரை
அழைத்துக் கொண்டு, தமிழ்ச் சங்கத்திற்கு
திருவள்ளுவர் சென்றதாகவும், அங்கே அறிவும்,
புலமையும் மிக்க சான்றோர்கள் சபையில்,
பல சான்றோர்களுடைய கேள்விக் கணைகளையும்,
சந்தேகங்களையும் எதிர்கொண்டு,
திருவள்ளுவர் வெற்றி பெற்ற பிறகே,
சபையில் இருந்த முதுபெரும் புலவர்கள் எல்லாம்
ஒருமனதாக திருக்குறளை ஏற்றுக் கொண்டார்கள்.
அதன் பிறகே, திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறுவார்கள்.

அரங்கேற்றம் முடிந்ததும், அங்கிருந்த புலவர்கள் சிலர், இடைக்காட்டு சித்தரிடம் திருக்குறளைப் புகழ்ந்து, திருக்குறளைப் போலவே இரண்டு வரியில் பாடுமாறு கேட்கவே, அவரும்,

‘‘**கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்**’’ எனப்பாடி

அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார்.

அங்கிருந்த தமிழ் மூதாட்டி ஔவையாரிடமும்,
திருக்குறளைப் புகழ்ந்து பாடும்படி புலவர்கள் கேட்கவே,
புலவர்களுக்கு எல்லாம் புலவர் திருவள்ளுவரைப் பற்றி
மிகப்பெரிய கருத்தை பாடிய பிறகு, அதற்கு மேல் நான்
என்ன பாடப் போகிறேன், வேண்டுமானால் அவர் பாடிய

‘‘கடுகைத் துளைத்து ஏழ் கடலை புகுத்திய’’ என்ற வரியில் கடுகுக்குப் பதிலாக,

**‘‘அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்’’ என்று**

பாடியதாகச் சொல்வார்கள்.

இன்று விருது பெறும் நீங்கள்
இன்னும் பல உயரிய விருதுகளைப் பெற்று
நீண்ட நெடுங்காலம் தமிழ் வாழ்வதற்காக
நீங்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

‘பிறந்த நாடே சிறந்த கோயில்
பேசும் மொழியே தெய்வம் என்பதை
மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்
**கொள்கை கோபுரமாகும்’**
என்று கூறிக்கொள்வதோடு

பூமிக்கு வந்த புண்ணியம்
ஏழைகளின் இல்லங்களில்
விளக்கேற்றிய ஒளி விளக்கு
தாய்மையின் உறைவிடம்
தர்மத்தின் மறு உருவம்
உலக தமிழர்களின் காவலர்
அன்னைத் தமிழ் பூமியில் உயர்ந்து நிற்கும்
‘அம்மா’ என்னும் கோபுரத்தையும்,
அறிவுத் திருக்கோயிலான
திருவள்ளுவரையும் வணங்கி
நிறைவு செய்கிறேன்.

வருகை தந்துள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய இதயங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

நன்றி!  வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**